14th March 1961]

(d) The Tirunelveli-Cape Comorin Railway line is one of the schemes recommended by this Government for inclusion in the Central Third Five-Year Plan and the matter is under consideration of the Government of India.

SRI A. V. P. ASAITHAMBI: 100 கோடி குறைக்கப்பட்டு விட்டதால், இதில் விடப்பட்டது கன்னியாகுமரி மாவட்ட ரெயில்வே மட்டுமா? விருதுநகர்-மானாமதுரை ரெயில்வேயும் இதனால் கைவிடப்பட்டதா?

THE HON. SRI C. SUBRAMANIAM: திராவிட முன்னேற்றக் கழக அங்கத்தினர்களுக்கு இருக்கக்கூடிய குழப்பம் எப்போதும் நீங்குவதில்லை. 290 கோடி நம் ராஜ்யத் திட்டங்கள். ரெயில்வே, மத்திய சர்க்கார் திட்டத்தைச் சேர்ந்தது. ஆகவே 100 கோடி அளவிற்கும், கன்னியாகுமரி ரெயில்வே திட்டத்திற்கும் எந்தவிதமான சம்பந்தமும் கிடையாது. ரெயில்வே திட்டங்கள் எல்லாம் மத்திய சர்க்கார் திட்டங்களில் சேரக் கூடியவை.

Third Five-Year Plan Discussions (Ministers' and Officers' visit)

*813 Q.—SRI V. K. KOTHANDARAMAN (on behalf of SRI M. KALYANASUNDARAM): Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) the number of Ministers and Officers who visited Delhi in November 1960 to meet the Planning Commission to finalize the Third Five-Year Plan; and

(b) the travelling and daily allowances drawn by them.

THE HON. SRI C. SUBRAMANIAM: (a) Three Ministers including the Chief Minister, and twenty-three officers of the Government attended the Third Plan discussions in New Delhi in November 1960; and

(b) Rs. 15,584·18 nP.

SRI A. V. P. ASAITHAMBI: திட்டக்குழுவை சந்திப்பதற்கு இங்கிருந்து புறப்பட்ட அமைச்சர்கள், அவர்களிடம் கேட்டுக்கொண்டபோது, தொகையை குறைக்கக்கூடாது என்பதை வற்புறுத்துவதற்காகத்தானா? அல்லது மேற்கொண்டு ஏதாவது தொகை வேண்டுமென்று வற்புறுத்தவா? இந்த மாதிரி தொகையை குறைப்பதில் எந்தெந்த திட்டங்கள் இந்த சர்க்கார் சொன்னதில் இன்றையதினம் கைவிடப்படக்கூடிய நிலையிருக்கிறது?

THE HON. SRI C. SUBRAMANIAM: திட்டங்கள் எந்த முறையில் மாற்றியமைக்கப்படப்போகிறது என்பதுபற்றி போன கேள்வியில் சொன்னேன். இப்பொழுது கேட்பது யார் யார் போனது என்பதைப் பற்றி. திட்டத்தை எந்த முறையில் அமைக்கவேண்டுமென்பதுபற்றி திட்டக் கமிஷனுடன் விவாதிப்பதற்காக சென்றதல்லாமல் தொகையைக் குறைப்பதற்கோ, கூட்டுவதற்கோ அல்ல. எந்த முறையில் திட்டம் அமைய வேண்டும் என்று தேசிய அடிப்படையில் விவாதிப்பதற்காக.